கோகுலம்

குழந்தைகள்
மாதமிருமுறை
15.4.1972
30 காசு





ரெக்ஸ் பற்றிய மிகவும் திருப்தியளிக்கும் இரண்டு அம்சங்கள்.

ஒன்று, இதன் உன்னத தரம் — இப்போது, இதன் விலைநயம்.

ஒவ்வொருவர் சுவைக்கும் ஏற்ற ஸ்க்வாஷ்கள் மற்றும் ஸிரப்களின் வகைகள்.

ரெக்ஸ் ஸ்க்வாஷ்கள் மற்றும் ஸிரப்கள்— அதாவது, இனிமையான, இன்சுவையுள்ள, சாறு செறிந்த பழங்களிலிருந்து தயாரிக்கப்பட்ட உன்னத பானங்கள் இவை. கவனமுடன் தேர்ந்தெடுத்த நேர்த்தியான பழங்களுடன் தூய கருப்பஞ் சாற்றுப் பாகும், விசேஷமான இதர சரக்குகளும் சேர்த்துத் தயாரிக்கப்படுகின்றன. சுவைத் தறியாத புத்துணர்ச்சி தரும் பானங்கள் இவை. இப்போது ரெக்ஸ் பானங்கள் சகாய விலையில் கிடைக்கின்றன. ரெக்ஸ் பானங்களைவிட அதிக திருப்தியளிக்கும் பானங்கள் வேறென்ன இருக்க முடியும்?

- ஆரஞ்சு ஸ்க்வாஷ்
- ஆரஞ்சு கிரஷ்
- லெமன் ஸ்க்வாஷ்
- லெமன் பார்லி
- லைம் ஜூஸ் கார்டியல்
- மாங்கோ ஸ்க்வாஷ்
- கோலா கான்ஸன்ட்ரேட் ஃப்ரூட் ஸிரப்
- ராஸ்பெர்ரி ஸிரப்
- ஸ்ட்ராபெர்ரி ஸிரப்
- பைனாப்பிள் ஸிரப்
- ரோஸ் ஸிரப்

கார்ன் ப்ராடக்ட்ஸ் கம்பெனி (இந்தியா) பிரை. லிட். பம்பாய்-1.

வாழ்வே வாடாத புதுமையின் சித்திரம்



‘க்ளிக்’ அடித்துவைப்பீர்..நிரந்தரம்

எப்போதுமே உங்கள் கையோடிருக்கட்டும் தப்பாத் துணையான க்ளிக் III. மறைந்தோடும் வாழ்வின் மணியான கணங்களை நிரந்தரமாக்கிக் காப்பீர்— நினைவுமுகம் கண்முன் நிற்பதற்கே.

‘இலக்கு வைத்ததும் சடக்’ என எடுக்கவே ஆக்பா க்ளிக். காரியத் திறமை வாய்ந்தது. உண்மை தவறாதது. கையாள எளிது. சிக்கனமிக்கது.

- 120 பிலிம் ரோல் ஒவ்வொன்றுக்கும் பெரிது பெரிதாக (6 x 6 செமீ.) படங்களைப் பெறுவீர்கள்.
- சிறப்பானதோர் தயார்த் தோலுறை, போர்ட்ரெய்ட் லென்ஸ், ஃப்ளாஷ்கன் ஆகியவை மேற்கொண்டு தனிவிலைக்குக் கிடைக்கும்.

தெள்ளத் தெளிவான பிரிண்டுகளுக்கும், என்லார்ஜ்மெண்டுகளுக்கும் கண்டிப்புடன் கோருவீர் ஆக்பா-கேவார்ட் போட்டோத் தாள்களை.

அனுமதிபெற்ற எல்லா ஆக்பா-கேவார்ட் விற்பனையாளர்களிடமும் கிடைக்கும்.

ஆக்பா-கேவார்ட் AG லிவர்குஸன் அவர்களின் கூட்டுறவோடு இவற்றைத் தயாரிப்போர்: தி நியூ இந்தியா இண்டஸ்ட்ரீஸ் லிட்.

விலை ரூ. 56.25 (எக்ஸைஸ் தீர்வை உள்ளிட்டது. இதர வரிகள் தனி).



ஏகபோக விநியோகஸ்தர்கள்:

ஆக்பா-கேவார்ட் இந்தியா லிமிடெட்

பம்பாய் • நியூ டெல்லி • கல்கத்தா • சென்னை.

® புகைப்பட சாதனங்களின் தயாரிப்பாளர்களான ஆக்பா-கேவார்ட், ஆண்ட்வெர்ப்/ லிவர்குஸன் ஆகியோரின் ரிஜிஸ்டர்டு டிரேடு மார்க்.

ஆக்பா க்ளிக்—
இந்தியாவின் உன்ன
புகழ்பெற்ற காமிரா

பசியைப் பெருக்குவதோடு நின்றுவிடும் எந்த டானிக்கும் பாதிவேலையைத்தான் செய்யும்

*

இன்க்ரிமின் பெறுவீர்..

உண்ணும் மிகையான உணவை ஓங்கிய வளர்ச்சியாக மாற்றும்




*

சேருவீர் இன்க்ரிமின் இயக்கத்தோடு... வளர்ச்சிக்கான பசியைப் பெறுவீர் வாழுடனே!

பசியைப் பெருக்குவதோடு மட்டுமின்றி, உண்ணும் மிகையான உணவை ஓங்கிய வளர்ச்சியாக மாற்றுகிறது இன்க்ரிமின் டானிக். காரணம், உங்கள் குழந்தை சாப்பிடும் புரதச் சத்துக்களை மேம்படப் பயன்படுத்திக்கொள்ளும் அதிமுக்கியமான அமினோ அமிலம் அதில் அடங்கியுள்ளது.

◀ பெரிய குழந்தைகளுக்கு இரும்புச் சத்து அடங்கிய இன்க்ரிமின் ஸிரப் — 175 மிலி & 57 மிலி. இளங் குழந்தைகளுக்கு இன்க்ரிமின் டிராப்ஸ் — 10 மிலி.




இன்க்ரிமின்*

டானிக் எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கின்றன.

* அமெரிக்கன் ஸயானமிட் கம்பெனியின் ரிஜிஸ்டர்டு டிரேடு மார்க்.

Lederle

லின்டாஸ்-INC, 22 - 140 TM




JEEP

கோகுலம்

பரிதாபி
சித்திரை - 3


ஏப்ரல் 15
1972

பட்டு : ஏண்டா பக்கத்தைப் புரட்டாமல் நின்னுட்டே? பொருளடக்கம் படிக்கவா ?

கிட்டு : சேச்சே, கோகுலத்தில் பொருளடக்கம்' பார்த்துத்தான் படிக்கணுமா என்ன? 'கோபுலு'சார் போட்டிருக்கும் படத்தை ரசிக்கத்தான் இங்கே கொஞ்சம் தாமதிச்சேன். இனி மேலே போகலாம்.







மலர் 1 இதழ் 1

உயிர்களிடத்து அன்பு வேண்டும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேண்டும்

- பாரதியார்

அன்புக்குரிய குழந்தைகளே!

அதிகாலை, புலர்ந்தும், புலராததுமான வேளை. சூரியனின் பொற் கிரணங்கள் மெல்ல மெல்ல நீள்கின்றன. தேவதையின் மந்திரக் கோலைப் போல, இக்கிரணங்கள் ஒவ்வொரு பொருளைத் தொடும் போதும் ஒரு அற்புதம் நிகழுகிறது - இருள் ஓடுகிறது. பனி விலகுகிறது. பசும் புற்களிலே பனித் துளிகள் பளபளக்கின்றன. பூ மொக்குகள் இதழ் அலர்ந்து அழகழகாக மலர்கின்றன. ஆகா, எத்தகைய இனிமையான காட்சி?

குழந்தைகளான உங்களைக் குதூகலத்தில் ஆழ்த்தக் கோகுலமும் இப்படித்தான் மலர்ந்திருக்கிறது. அன்று கண்ணன் கோகுலத்தில் எப்படியெல்லாம் விளையாடி என்னவெல்லாம் லீலைகள் புரிந்து, மாயங்கள் செய்து மக்களின் மனத்தைக் கொள்ளை கொண்டானே அப்படியெல்லாம் உங்களை மகிழ்விக்க இந்தக் கோகுலம் உதயமாகியிருக்கிறது. தமிழ் கூறும் நல்லுலகில் உங்களுக்கென்று உயர்ந்த லட்சியங்களுடன் கூடிய ஒரு குழந்தைகள் பத்திரிகை இல்லையே என்ற உஙகள் பெற்றோர்களின் குறையைப் போக்கக் கோகுலம் பிறந்திருக்கிறது.

சிங்காரக் கதைகள், சிந்திக்க வைக்கும் விஷயங்கள், விஞ்ஞான அற்புதங்கள், விந்தைச் செய்திகள், வேடிக்கைகள், விளையாட்டுகள், விடுகதைகள் என்று கோகுலத்தில் இடம் பெறப் போகும் விஷயங்களுக்குக் கணக்கே இல்லை. உலகின் பல்வேறு பகுதிகளை, அப்பகுதி மக்களை, அவர்களின் கலைகளை, கற்பனைகளை அங்குள்ள அதிசயங்களையெல்லாம் கோகுலத்தின் மூலம் கண்டு மகிழப் போகிறீர்கள். கண்ணைக் கவரும் வண்ண வண்ணப் படங்களுக்கும் பஞ்சமிராது.

தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்த குழந்தைகள் ஒவ்வொருவரும் வாங்கிப் படித்துப் பத்திரப படுத்தி வைக்கும் பொக்கிஷமாகக் கோகுலத்தின் ஒவ்வொரு இதழையும் உருவாக்கித் தர ஆண்டவன் அருளும் ஆசியும் உங்கள் அன்பும் ஆதரவும் வேண்டும்.

சதாசிவம்

ஸ்ரீமுகம்





"ஸ்ரீ:"

"ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி
பாதுகாப்யாம் நம:"

இன்று வளரும் குழந்தைகளே நாளை பெரியோர்களாகிறார்கள். அவர்கள் ஊன் வளர்ச்சியோடு உள்ளத்திலும் வளர்ச்சி ஏற்பட்டால்தான் சான்றோராக வாழ வழியுண்டு. சில குழந்தைகள் பரீக்ஷித்து போலவும், துருவ பிரகலாதிகளைப் போலவும் கருவிலேயே திருவுடையார்களாய்ப் பிறந்தால் கவலையிருக்காது. ஐம்புலன்கள் ஆட்சி செய்கின்ற இக்காலத்தில் குழந்தைகளின் உள்ள வளர்ச்சிக்கு உறுப்பான கல்வியும், அவைகளை உணர்த்துகின்ற ஆசிரியர்களும் குறைவுற்று இருக்கின்ற வேளையில், அந்தப் பெருநோக்கைக் கருத்தில் கொண்டு நல்லதோரு வழிகளைப் பிஞ்சு மனங்களில் பதியுமாறு செய்ய வேண்டியது சான்றோர்கள் கடன்.

"யா வித்யா ஸா விமுக்தயே" என்றபடி அல்லல்களிலிருந்து விடுபடும் வழிகளைப் போதிக்கும் கல்வியே உயர் கல்வி. இப்பெரும் பணியை, ஸ்ரீ சதாசிவம் 'கோகுலம்' என்ற பத்திரிகை மூலம் பரப்புவதை நாம் மிகவும் பாராட்டுகிறோம். அதோடு அவரது முயற்சி நல்ல பலன் பெற வேண்டுமென்றும் ஆசாஸிக்கிறோம். கோகுலத்தே பிறக்கப் போகின்ற இம்முயற்சி கண்ணன் வளர்ந்தது போல இன்னல்களைக் களைந்து, இன்பத்தினைக் கொடுத்து, கீதை போன்று தத்துவங்களை உணர்த்தி, இளஞ் சிறார்களைப் பண்புடை மக்களாக்கி, தங்களுக்கும், தங்கள் ஜன்ம பூமிக்கும் உயர்வினைக் கொடுக்கும் உள்ளத்தார்களாக்கும் என்பதில் ஐயமில்லை.

இங்ஙனம்


ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகா ஸ்ம்ருதி

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகள்
ஸ்ரீ மடம் காஞ்சிபுரம்

முகாம் : திருவனந்தபுரம்
தேதி : 25-3-1972

குழந்தைகளுக்குப் பார்த்துப் பார்த்து அலுக்காது உள்ளது யானை. யானை முகத்தோனின் (விநாயகப் பெருமானின்) அருளுடன் தெய்வக் குழந்தைச் செல்வமான ஸ்ரீ கண்ணபிரானின் ஜன்ம பூமியான கோகுலத்தை ஞாபகப் படுத்திக் கொண்டு அதன் மூலம் குழந்தைகளுக்கு நல்லொழுக்கம், நல்லறிவு, ஈச்வரபக்தி, நம் கலாசாரங்களைப் புகட்டும் கதை, கட்டுரை, கவிதைகளைத் தாங்கிக் கொண்டு 'கோகுலம்' என்கிற பெயரில் தமிழ்ப் புத்தாண்டு முதல் ஒரு பத்திரிகை வெளிவருவதை அறிந்து ஸந்தோஷிக்கிறோம்.

ஸ்ரீ நாராயணஸ்ம்ருதி



ஆத்திசூடி

ராஜாஜி

இந்த ஆத்திசூடி விளக்கம் நான் முப்பத்தாறு ஆண்டுகளுக்கு முன் எழுதியிருந்ததை — சமீபத்தில் கைக்குச் சிக்கியதை — காந்தி ஆசிரமத்துப் பணியாளர்கள் எடுத்து அனுப்பினார்கள்.

இதைப் படித்துவிட்டு, 'கோகுல'த்தில் போடலாம் என்று கல்கியார் விரும்பியதற்கு ஒப்புக்கொண்டேன்.

ஆங்காங்கு எனக்குத் தற்போது தோன்றும் சில கருத்துக்களைப் பெரியோர்களும் படிக்கலாம் என்று சேர்த்திருக்கிறேன்.

ஆயிரம் வருஷங்களுக்கு முன் தமிழ்நாட்டுக் குழந்தைகளுக்கென்று பாடல்கள் பாட சரஸ்வதி அவதரித்தாள். அவள்தான் அவ்வை. அவள் பாடிய நூல்களில் இரண்டு, 'ஆத்திசூடி', 'கொன்றைவேந்தன்'.

ஆத்திசூடியில் 109 பாட்டுக்கள் உண்டு. கொன்றைவேந்தனில் 91 பாட்டுக்கள் உண்டு. ஆத்திசூடி பாடும்போது அவ்வையார் விநாயகப் பெருமானை வணங்கினாள். ஒவ்வொரு நாளும் ஆத்திசூடி பாடம் ஆரம்பிக்குமுன் நாமும் விநாயகக் கடவுளை வணங்குவோம்.

ஆத்திசூடி யமர்ந்த தேவனை
ஏத்தியேத்தித் தொழுவோம் நாமே


ஆத்திப்பூ மாலையைச் சூடினவராகிய சிவபெருமானுக்குப் பிரியமான குழந்தை விநாயகக் கடவுள். அவ்விநாயகக் கடவுளை நாம் வாழ்த்தி வணங்குவோம்.

ஆத்திசூடி — ஆத்திப் பூமாலையைச் சூடினவராகிய சிவபெருமானுடைய, **அமர்ந்த** — அன்பைப் பெற்ற, **தேவனை** — விநாயகக் கடவுளை.


1. அறஞ்செய விரும்பு

அறம் — தருமம். அதாவது நாம் செய்ய வேண்டிய நல்ல காரியங்களைச் செய்வதும் செய்யத் தகாத பாவ காரியங்களைச் செய்யாமல் இருப்பதும்.

தருமத்தைச் செய்ய விரும்பு. தருமத்தைச் செய்வதே உன் ஆசையாக இருக்க வேண்டும். மற்ற ஆசைகளைவிட இதுவே பெரிய ஆசையாக இருக்க வேண்டும். பாவம் செய்ய மனத்திலும் எண்ண வேண்டாம். தருமத்தையே செய்ய விரும்பினால் அதன் மேல் தெரியாமலோ அல்லது சக்தி இல்லாததினாலோ தவறினாலும் குற்றமில்லை.



கோகுலம்



திருமுருக கிருபானந்த வாரியார்

கோ - பசு; குலம் - கூட்டம்.

கோகுலம் என்ற சொல் பசுக் கூட்டம் என்று பொருள்படும். பசுக் குலங்கள் வாழ்ந்தால் பாரத நாடு வாழும். பசு தெய்வத்துக்கு நிகரானது. ''வாழ்க, அந்தணர் வானவர் ஆனினம்'' என்று திருஞான சம்பந்தர் வாழ்த்துகின்றார். இதனால் பசுவின் பெருமை தெற்றென விளங்கும்.

பசுவினால் காளை மாடுகள் தோன்றுகின்றன: காளை மாடுகளால் பயிர்கள் விளைகின்றன. பயிர்களால் உயிர்கள் தழைக்கின்றன. உயிர்களின் வாழ்க்கைக்குப் பசுக் குலம் இன்றியமையாதது. பசுக் குலங்களைக் காக்கும் ஆயர் குலத்தில் பகவான் கிருஷ்ணர் அவதரித்தார். ஆனாய நாயனாரும், சண்டேசுர நாயனாரும் பசுக் குலங்களைக் காத்தார்கள் என்று பெரிய புராணம் கூறுகின்றது.

கோகுலத்தின் பெருமையை விளக்கும் ஒரு பழைமையான வரலாற்றைக் கூறுகின்றேன்.

ஏழு புண்ணிய நதிகளில் மிகச் சிறந்தவை கங்கையும் யமுனையும்: இவை பரமாத்மாவுக்கு இரு கண்கள் போன்றவை.


இந்த இரு மகாநதிகளும் கூடுகின்ற இடம் பிரயாகை எனப்படும். இந்த இடத்தில் பிரதிஷ்டானபுரம் என்ற திருநகரம் அமராவதிபோல் விளங்கியது. வானவரும் வந்து வாழ்வதற்கு விரும்புவார்கள். சோலைகளும், அறச்சாலைகளும் நிறைந்த இந்த நகரத்தில் வாழ்பவன் நகுஷன். இந்திரனை யனைய சந்திர குலாதிபன். நகுஷன் நூறு அசுவமேத யாகங்களைச் செய்தவன். செம்மையாக அரசு புரிந்து மும்மைசால் உலகங்களும் புகழுமாறு மக்கள் திலகமாக விளங்கினான்.

மிகப் பெரிய தபோதனர் பிருகு முனிவர். அவர் உலக நலன் கருதி நித்தியாக்கினி வளர்ப்பவர். ஒரு சமயம் அவர் நீராடச் சென்றார். அவருடைய மனைவி புலோமை என்னும் உத்தமி, நிறை கருவுற்றிருந்தாள். அவள் அக்கினியில் நெய்யைச் சொரிந்து கொண்டிருந்தாள். யாகத் தீயை வளர்க்கும் கற்புத் தீயுடன்கூடிய அம் மாதரசியை அவ்வழி வந்த புலோமன் என்ற அரக்கன் கண்டான்: கண்டமாத்திரத்தில் அவள் மீது காதல் கொண்டான். பாவத்துக்கு அஞ்சாத அப் பாதகன் கரு நிறைந்திருந்த திருவளையாளை எடுத்துத். தோளில் வைத்துக் கொண்டு விண்ணிடை ஓடினான். அம் மாதரசி 'ஓ'வென்று கதறி அழுதாள். அவள் கண்ணீர் ஓர் ஆறாகப் பெருகிற்று. அந்த நதி வது சரை எனப் பெயர் பெற்றது. வது — பெண்—சரா— தொடர்ந்து நடந்தது. கருவிலிருந்த சேய், தாயின் அழுகுரலைக் கேட்டு நழுவி வெளிப்பட்டுப் பிறந்தது. அப்பாலகன் சினந்து அசுரனைப் பார்த்தான். அசுரன் எரிந்து கரிந்து சாம்பராயினான்.

தாய் வயிற்றிலிருந்து நழுவியபடியால் அப்புதல்வர் சியவனர் எனப் பேர் பெற்றார்.

சியவனர் வேதம் அனைத்தும் ஓதி உணர்ந்தார். பல காலம் தவம் புரிந்து ஒளி மயமாக விளங்கினார். ஒப்பற்ற உயர்ந்த உறுதியுமுடையவராகத் திகழ்ந்தார் அப்பெரியார்.

ஒரு சமயம் சியவனர் கங்கையும் யமுனையும் கூடுகின்ற இடத்தில் தண்ணீருக்குள் இருந்து தவம் செய்தார். வேகமுடைய கங்கை யமுனை நதிகளின் வெள்ளத்தைத் தலையில் தாங்கிக் கொண்டு கட்டை போல் அசைவற்று நிலைத்திருந்தார். நதியில் வாழும்



உயிர்கள் யாவும் அவரிடம் அன்பு செய்தன. பன்னிரு வருடங்கள் நீருக்குள் தவஞ் செய்து கொண்டிருந்தார்.


வலை வீசி மீன் பிடித்து விற்று வாழும் மீனவர்கள் ஒரு நாள் அங்கு வந்தார்கள். நல்ல உடற்கட்டும், உறுதியும் உடைய மீனவர்கள் புதிய கயிறுகளால் பின்னப்பட்ட வலையை வீசினார்கள். அவர்கள் ஆரவாரஞ் செய்து கொண்டு அந்த நதியில் அங்கும் இங்கும் திரிந்து மீன் பிடித்தார்கள். அவ்வாறு வலைவீசி இழுக்கும்போது மீன்களுடன் மகாமுனிவரான சியவனர் அந்த வலையில் அகப்பட்டார். உடம்பெல்லாம் பாசிகள் நிறைந்து கிளிஞ்சல்கள் ஒட்டிக் கொண்டிருந்தன. மீன்களுடன் சியவனரும் கரையில் சேர்க்கப்பட்டார்.

ஒளிமயமான திருமேனியும் சிவந்த சடை முடியும், நெருப்பு போல் ஒளி செய்கின்ற கண்களையும் உடைய தபோதனரைக் கண்ட மீனவர்கள் நடுநடுங்கினார்கள்; பதறினார்கள். "நாம் பெரும் பிழை செய்துவிட்டோம். முனிபுங்கவருடைய தவத்தைக் கெடுத்துவிட்டோம். இவர் நம்மைச் சபித்துவிடுவாரே? அவர் சினந்தால் மேரு கிரி பொடியாகும்; ஏழு கடல்களும் வற்றிப்போகும். எரியால் சுடப்படினும் உய்வு உண்டாகும்; பெரியாரிடம் பிழைத்தால் உய்வு ஏது?" என்று எண்ணி ஏங்கி அஞ்சினார்கள்.

மீனவர்கள் அழுத கண்ணும், தொழுத கையுமாக சியவன முனிவருடைய தாமரைத் தாள்களில் வீழ்ந்தார்கள். எழுந்து கை கூப்பி நின்று, "தவ முனிவரே! நாங்கள் மீன் பிடித்து விற்று வாழும் பரம ஏழைகள். இழிந்த தொழில் புரிந்து வயிற்றை வளர்க்கும் அப்பாவி மக்கள் நாங்கள். ஐயனே! சகல உயிர்களையும் அருள் வலை வீசிப் பிடிக்கும் ஆண்டவனை அன்பு வலை வீசிப் பிடிக்கின்ற நீர் எங்கள் எளிய வலையில் அகப்பட்டு விட்டீர். உங்கள் தவத்தை நிலைகுலைத்துவிட்டோம். அறியாமல் செய்த ஏழைகளின் பெரும் பிழையைப் பொறுத்தருள வேண்டும்" என்று கூறிக் கண்ணீர் வடித்துத் தழுதழுத்த குரலுடன் வேண்டிக் கொண்டார்கள்.

வேத வேதங்களின் கரைகண்ட சியவனர் அவர்களின் அவல நிலை கண்டு மிகவும் இரக்கமுற்றார். அங்கு இறந்து கிடந்த மீன்களைக் கண்டு மிகவும் வருத்தம் அடைந்தார். "அன்புள்ள மீனவர்களே! நீங்கள் வருந்த வேண்டா: என்னுடன் வாழ்ந்த மீன்கள் மாண்டு விட்டனவே





என்றுதான் நான் பெரிதும் வேதனைப் படுகின்றேன். உங்களிடத்தில் எனக்கு அன்புங் கருணையும் உண்டாகின்றன'' என்றார்.

இவ்வாறு மீனவர்களுடன் சியவனர் உரையாடிக் கொண்டிருந்தார். இந்தத் தகவலை ஓர் ஒற்றன் கங்கை யமுனை சந்திக்கும் அங்குள்ள தலைநகரமாகிய பிரதிஷ்டான புரத்தை அரசு புரியும் அரசர் பெருமான் நகுஷனிடம் ஓடியுரை செய்தான்.

நகுஷ மன்னன் இதைக் கேட்டுத் திடுக்கிட்டான். அமைச்சர்களும் புரோகிதர்களும் புடைசூழ விரைந்து சென்று மண்ணில் வந்த ஆதித்தனைப் போல் ஒளி செய்து கொண்டிருக்கும் சியவன முனிவரைப் பல முறை பணிந்தான்.

'' சுவாமி ! அடியேன் நகுஷன் : தங்கள் அடிமை. தாங்கள் இடும் கட்டளையை நிறைவேற்றுவேன். அடியேன் இப்போது என்ன செய்ய வேண்டும் ? உத்தரவு இடுங்கள்.''

சியவனர், ''வேந்தே! நீடூழி வாழ்க. இந்த மீனவர்கள் பரம ஏழைகள். வானவர்கள் போற்றும் நான் இந்த மீன்வர்கள் வலையில் சிக்கிக் கொண்டேன். வலையில் கிடைத்த பொருள்கள் யாவும் இவர்களுக்கே உரியவை ; அதனால் நான் இவர்கட்கு உரியவனாகிவிட்டேன். எனக்கு உரிய விலையை இவர்கட்கு ஈந்து என்னை விடுவிப்பாயாக'' என்றார்.

இதைக் கேட்ட நகுஷன் திகைத்தான்.

மேரு மலையினும் மேம்பட்ட தவ முனிவரை யாரால் விலை மதிக்க முடியும்? நெடிது சிந்தித்தான். மீனவரிடம் ஆயிரம் பொன் தருமாறு நிதி மந்திரியிடம் கூறினான்.

சியவனர், ''அரசனே ! தன்னைத் தானே கொண்டாடிக் கொள்ளக் கூடாது. அது ஆத்ம ஸ்துதியாகும். நான் ஆயிரம் பொன்னுக்கு மேம்பட்டவன் என்பதை மட்டும் நீ அறிந்து கொள்'' என்றார்.

நகுஷன் சிறந்த மதியாளன். 'முனிவருக்கு விலை மதிப்பு ஏது?' என்று எண்ணினான். அமைச்சர்களையும் புரோகிதர்களையும் பார்த்து, ''அன்புடையவர்களே ! சியவனர் மாதவ சிகாமணி; இப்போது எனக்குத் தரும விரோதம் வாராதிருக்க வேண்டும். எதைக் கொடுத்தால் முனிவருக்குச் சமானமாகும் ?'' என்றான்.

அமைச்சர்களும் புரோகிதர்களும், ''நூறாயிரம் பொன் தருக'' என்றார்கள்.

இதைக் கேட்ட சியவனருடைய சிவந்த இதழ்கள் விரிந்தன. புன்முறுவல் பூத்தார். அந்தக் குறிப்பு அது காணாது என்று அறிவித்தது.

நகுஷன், ''கோடிப் பொன் தருவேன்'' என்றான்.

அங்கிருந்த அந்தணர்கள், ''வேந்தே! பன்னிரு ஆண்டுகள் ஓடுகின்ற வெள்ளத்தில் கட்டையைப் போல் உறுதியுடன் தவஞ்செய்த இம்மாதவருக்குக் கோடிப் பொன்தானா பெறுமதி? இவர் அதற்கு மேலும் பெறுமதியுடையவர்'' என்றார்கள்.

நகுஷன், ''முனிவருக்கு விலையாக என் அரசு முழுவதையும் மீனவருக்கு வழங்குவேன்'' என்றான்.

பசுவின் வயிற்றில் பிறந்தவரும், காய் கனி கிழங்குகளை உண்ணுபவரும் கடுந் தவம் பூண்டவருமாகிய 'கவிஜர்' என்ற முனிவர் அங்கு இருந்தார். அவர் வேந்தனைப் பார்த்து, ''அரசர்பெருமானே ! இந்தப் பரம ஞானிக்குப் பதினான்கு உலகங்களும் ஈடாகமாட்டா: இவர் சீற்றமடைவாராயின் மூன்று உலகங்களும் சாம்பராகிவிடும். ஆதலால் இவருக்கு நிகர் ஒன்றுமே இல்லை'' என்றார்.

நகுஷன் அவருடைய அடிமலரை அஞ்சலித்து, ''சுவாமீ! எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. நான் இந்தப் பெரிய இடர்க் கடலில் விழுந்து தத்தளிக்கின்றேன். என்னையும் என் இராஜ்யத்தையும் கரையேற்றுகின்ற ஓடம் நீர். ஆதலால் இப்போது நான் என்ன செய்ய வேண்டும் ? உத்தரவு செய்யுங்கள்'' என்றான்.

கவிஜர் கூறுவார், ''நகுஷ வேந்தே ! அந்தணரும் கோகுலமும் ஒன்று என ஆன்றோர் கூறுவர். அந்தணர் குலத்தில் மந்திரங்கள் இருக்கின்றன. பசுக் குலத்தில் நெய் முதலிய ஓமத் திரவியங்கள்



அமைந்திருக்கின்றன. ஆதலால் அந்தணர்களுக்கும் ஆவுக்கும் விலையில்லை. அந்தணரும் கோகுலமும் சமானமானவை. ஆதலால் இந்த முனிவருக்கு ஈடாகக் கோகுலத்தைக் கொடு'' என்றார்.

நகுஷனும், அமைச்சர்களும், புரோகிதர்களும், ''நன்று'', ''நன்று'' என்று கூறி மகிழ்ந்தார்கள்.

உக்கிரமான தவமுள்ள சியவனரை நகுஷன் வணங்கி, ''பிரம்ம ரிஷியே! உமக்கு நிகராகக் கோகுலங்களை நல்குவேன்'' என்றான்.

இதனைக் கேட்ட சியவனர் மனம் மகிழ்ந்தார். ''அரசே! நான் எழுந்திருக்கின்றேன். நான் உன்னால் சரியான விலைக்கு வாங்கப்பட்டேன். அறநெறி வழுவாத அண்ணலே! பசுக்களுக்கு ஒப்பான செல்வம் உலகில் வேறு இல்லை. பசுக்களைக் கண்ணால் காண்பதும், காதால் கேட்பதும், தானஞ் செய்வதும் எல்லாப் பாவங்களையும் போக்கிச் சுகத்தைத் தரும். மண்ணுக்கும் விண்ணுக்கும் பசுவே ஆதாரம். பசு வணக்கத்துக்குரியது. பசு எந்த நாட்டில் துன்பமின்றி இன்பமுறுகின்றதோ அந்த நாடு தழைத்து ஓங்கும். பசுக்கள் பரகதிக்குப் படிகளாகும். கோகுலம் நினைத்தவற்றையெல்லாம் கறக்குந் தேவதைகள். கோக்கள் இலட்சுமிக்கு ஆதாரமானவை. பசு யாகத்துக்கு நெய் தருகின்றது. பசு எனக்கு நிகர் என்பது முற்றிலும் பொருந்தும். ஆதலால் மீனவர்கட்கும் எனக்கு ஈடாகக் கோகுலத்தைக் கொடும்'' என்றார்.

நகுஷ வேந்தன் கோகுலத்தை மீனவர்கட்கு வழங்கினான். சியவனர் மீனவர் மீது தன்னருள் சிந்தினார். இறந்த மீன்களுடன் மீனவர்கள் புண்ணிய உருவம் பெற்று வானவர்கள் பூமழை பொழிய, நகுஷன் பார்த்துக் கொண்டிருக்கும் போதே சுவர்க்க உலகம் சேர்ந்தார்கள்.

சியவனர், ''நகுஷனே! உனக்கு என்ன வரம் வேண்டும்? கேள்: தருவேன்'' என்றார்.

நகுஷன், '''அறநெறி வழுவாமை' என்ற ஒன்றே வேண்டும்'' என்றான்.

''அப்படியே ஆகுக'' என்று கூறி அருள்புரிந்துவிட்டு தவநிஷ்டையை முடித்துக் கொண்டு சியவனர் தமது ஆசிரமத்துக்குச் சென்றார்.

நகுஷன் மிக்க மகிழ்ச்சியுடன் தன் அரண்மனை சென்றான்.



காட்டில் பள்ளிக்கூடம்

'கிட்டு'

மணியும் மாலாவும் பள்ளிக்கூடம் போகத் தயாராக வாசலுக்கு வந்தன. தோளில் புத்தகப் பை. கையில் பகல் உணவுக்கான டிபன் தூக்கு. வாசல்படியில் நின்று கொண்டிருந்த தாயார் குழந்தைகளுக்கு முத்தம் கொடுத்துப் பள்ளிக்கு அனுப்பி வைத்தது. மணியும் மாலாவும் கிளம்பின. அவர்கள். நினை வெல்லாம் டிபன் தூக்கில் பகல் உணவுக்காக அம்மா தயாரித்துக் கொடுத்திருக்கும் தேனடையிலேயே இருந்தது. தேன் என்றால் அவைகளுக்கு ரொம்பப் பிடிக்குமே. ஏனென்றால், மணியும் மாலாவும் கரடிக் குட்டிகளாயிற்றே!

''இன்னிக்குப் பள்ளிக்கூடம் போகவே எனக்குப் பிடிக்கல்லே'' என்றது தங்கை மாலா, நடந்து கொண்டே.

'' எனக்கும்தான். அதுவும் அந்தப் புது வாத்தியார் ரொம்ப மோசம். வகுப்பில் பேசவே கூடாதாமே! விளை

யாடக் கூடாதாம், நம்ம டிபனைப் பசிக்கும்போது கொஞ்சம் முன்னாலேயே சாப்பிட்டால் என்ன? அதுவும் கூடாதாம்'' என்று ஆதங்கப்பட்டது அண்ணா மணி.

''அதுதான் போகட்டும். வகுப்பிலே கதை புத்தகம்கூடன்னு படிக்கக் கூடாதாம். மோசத்திலும் மோசம்....'' என்று படபடத்த மாலா, ''இன்னிக்கு நாம் பள்ளிக்கூடத்துக்கு மட்டம் போட்டால் என்ன?'' என்றது.

'' காட்டுக்குள்ளே போய் இன்னிப் பூரா இஷ்டப்படி விளையாடலாம், என்ன சொல்றே ?'' என்று கேட்ட மணி அடுத்த நிமிஷம் தங்கை மாலாவின் கையைப் பற்றி இழுத்தபடி பள்ளி போகும் பாதையை விட்டுக் காட்டுக்குள் ஓடிற்று.

காட்டுக்குள் போய்விட்டால் கரடிகளுக்குக் கொண்டாட்டம்தான். எத்தனையோ விளையாட்டுக்கள். மரங்களில் தாவி ஏறின, ஓடையில் குதித்து நீந்தித் துளைந்தன. அடர்ந்த காட்டில் சில இடங்களில் இருள் சூழ்ந்திருக்குமில்லையா? அங்கெல்லாம் மரங்களின் பின்னால் மறைந்து கொண்டு ஒளிந்து பிடித்து விளையாடின.

பிறகு ஒரு மரத்தடியில் உட்கார்ந்து தேனடை டிபனைச் சப்புக் கொட்டியபடி தின்று தீர்த்தன. டிபன் சாப்பிட நேரம் ஆகவில்லை. ஆனால் அதன் நினைவாகவே அவைகளால் விளையாட முடியவில்லை.

இவை சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது ஓர் அணில் மரத்திலிருந்து கீழே இறங்கியது, தனக்குக் கொறிக்க ஏதாவது கிடைக்குமா என்று பார்க்க. '' நீங்கள் பள்ளிக்கூடம் போகவில்லையா?'' என்று கேட்டது கரடிகளிடம்.

''புது வாத்தியாரை எங்களுக்குப் பிடிக்கவில்லை'' என்றது மாலா.

''வகுப்பில் எங்கள் இஷ்டப்படி எதுவுமே செய்ய விடுவதில்லை'' — இது மணி.


அந்தப் பக்கமாக வந்த ஒரு முள்ளம் பன்றி, ''காட்டில் ஒரு பள்ளிக்கூடம் இருந்தால் நான் தவறாமல் படிக்கப் போவேன். பள்ளிக்கூடம் போவதற்கு அதிர்ஷ்டம் செய்திருக்க வேண்டும், இல்லையா ?'' என்று அணிலைப் பார்த்துக் கேட்டது.

'' அதிர்ஷ்டமா ? பள்ளிக்கூடம் போவதா ?'' மாலாவும் மணியும் கேலியாகச் சிரித்து, ''நீங்கள் ஏதோ தமாஷ் செய்கிறீர்கள்'' என்றன.

''அது ஒண்ணும் தமாஷ் இல்லை '' என்று பல குரல்கள் ஒரே சமயத்தில் ஒலித்தன. அதைத் தொடர்ந்து ஏழெட்டு எலிகள் மரத்தின் வேர் பகுதிப் பொந்திலிருந்து வெளிப்பட்டன. '' பள்ளிக்கூடம் இல்லையே என்று நாங்கள் எப்படித் தெரியுமா ஏங்கிக் கிடக்கிறோம்? நாளெல்லாம் இப்படி வீணாகப் பாழாவதில் எங்களுக்கு ஒரே வெறுப்பு.''


அப்போது அந்த எலிகளின் அம்மா வெளியே வந்தது. ''பொழுதெல்லாம் என் காலைச் சுற்றிச் சுற்றி வருகின்றன. பொழுது போக நான் ஏதாவது அவைகளுக்குப் புதிது புதிதாக விளையாட்டுக்களைச் சொல்லித் தரவேண்டி இருக்கிறது'' என்று அலுத்துக் கொண்டது.

''நாளெல்லாம் பூமிக்கு அடியில் இருந்து பார்த்தால் அது எப்படிப் 'போர்' அடிக்கும் என்று தெரியும்.'' இப்படிச் சொல்லிக் கொண்டே தலையை வெளியே நீட்டியது பூமியிலிருந்து ஒரு மூஞ்சூறு.



''நமக்கெல்லாம் வேண்டியது காட்டில் ஒரு கிண்டர் கார்டன் பள்ளிக்கூடம்'' என்றது எலி அம்மா.

''எனக்கு ஒரு பேஷான யோசனை தோன்றுகிறது'' என்றது மாலா. ''இங்கேயே இப்போதே நாங்கள் ஒரு பள்ளிக்கூடத்தை ஆரம்பித்தால்--எப்படி இருக்கும்? நானும், அண்ணா மணியும் கற்றுக் கொண்





டிருப்பதை யெல்லாம் உங்களுக்குச் சொல்லித் தருகிறேம்.''

இந்த யோசனை அங்கு கூடி யிருந்த வர்களுக்கெல்லாம் ஒரே மகிழ்ச்சியாக இருந்தது. அணில் குடுகுடுவென்று மரத்தின் மீது ஏறி அங்குள்ள பறவை களிடம் இந்தச் சந்தோஷச் சமாசாரத் தைச் சொல்ல ஓடியது. முள்ளம் பன்றி தன் தம்பியை அழைத்து வர உருண்டு ஓடியது. அம்மா எலி தன் குழந்தை களின் கைகால், முகம் எல்லாம் சுத்தம் செய்து புதுப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்புவதில் முனைந்தது.

ஒரு பெரிய மரத்தின் அடிப் பாகம் கரும் பலகையாயிற்று. மாலா தன்னிட மிருந்த சாக்கட்டியால் எழுதிப் பார்த் தது. திருப்தியாக இருந்தது. புதிய பள்ளியில் படிக்க வந்தவர்களை வரிசைப் படுத்தி உட்கார வைத்தது மணி. எலிகளுக்கு முன் வரிசையில் இடம் கொடுக்கப்பட்டது. அணில், முள்ளம் பன்றி, மூஞ்சூறு எல்லாம் பின் வரிசை யில். பறவைகள் ஒரு தாழ்ந்த கிளையில் வரிசையாக உட்கார்ந்து கொண்டன.

முதலில் கடவுள் வணக்கம் பாடப் பட்டது. எல்லாக் குழந்தைகளும் இதை ரொம்ப ஆசையோடு வர வேற்றூர்கள். முக்கியமாகப் பறவைகள் அழகாக இசையோடு பாடின. மாலா வும், மணியும் தாங்கள் கற்றுக் கொண் டிருந்த 'நர்சரி'ப் பாடல்களைப் பாடிக் காட்டினர்கள். வாயில் இருக்கும் வடையை மறந்து பாடிய காக்கை, திராட்சை புளிக்கும் என்று ஓடிய நரி, சிங்கத்தை விடுவித்த சுண்டெலி ஆகிய கதைப் பாட்டுக்களெல்லாம் இசை யோடு பாடப்பட்டன. பாட்டு, கதை எல்லாவற்றின்போதும் வகுப்பு அமைதி யாகவே இருந்தது.

அடுத்து மணி, கணக்குகளைக் கரும் பலகையில் எழுதி அதை எப்படிப் போடு வது என்று விளக்க ஆரம்பித்த போது தான் மாணவர்களிடையே அமைதி யின்மை ஏற்பட்டது. எலி மரத்தின் மீது ஓட, அதைத் துரத்திக் கொண்டு அணில் பாய, அப்போதுதான் அதன் அடர்ந்த வால், மணி எழுதி இருந்த கணக்கை எல்லாம் துடைத்துக்கொண்டு போயிற்று. அது தற்செயலாக நேர்ந் ததா அல்லது திட்டமிட்டுச் செய்யப் பட்டதா என்பது தெரியவில்லை. முள்ளம் பன்றிச் சகோதரர்கள் இருவ ருக்கிடையே பெரிய தகராறு. வாத்தியாரம்மா மாலாவின் அருகில் உட்காருவது யார் என்பதில். ஆனல் மாலாவுக்கோ இருவர் அருகிலும் உட் காருவதில் விருப்பமில்லை. இதனிடையே சில எலிகள், மணி, மாலாவின் பள்ளிக் கூடப் பையைத் திறந்து அதிலிருந்த 'கோகுலம்' பத்திரிகையை வெளியே எடுத்துப் படம் பார்க்க ஆரம்பித்துச் சண்டை போடலாயின. மூஞ்சூறு— அது பகல் வேளையானதால் — தூக்கம் கண்ணைச் சுற்ற ஆடி விழலாயிற்று. ஆகவே தன் பொந்துக்குள் போய்ப் புகுந்து கொண்டது. இருந்தாலும் புதுப் பள்ளிக்கூட ஆசையால் அரைத் தூக்கத்தில் திடீர் திடீர் என்று நினைத்த இடத்தில் பூமிக்குள்ளிருந்து தலையை நீட்டி மேலே உட்கார்ந்திருந்தவர்களைக் கீழே உருட்டிவிட்டது.

இப்படியாக யாரையும் அவர்கள் இடத்தில் கொஞ்ச நேரம் அமைதியாக உட்கார வைத்துப் பாடம் நடத்த முடியவில்லை, மணி மாலாவினல்.

பறவைகள் தன்னிச்சைப்படி பறந்து போகலாயின.

''நம் வாத்தியார் சில சமயங்களில் ஏன் அப்படி நம் மீது கோபித்துக்கொள் கிறார் என்பதன் காரணம் இப்போது தான் புரிகிறது மாலா'' என்றது மணி.


''எனக்கும்தான். நாம் வாத்தியா ராகக் கொஞ்ச நாழி இருந்து பார்க்கும் போதுதான் அந்தக் கஷ்டம் தெரி கிறது'' என்றது மாலா. ''இவர்களை அடக்கவே முடியவில்லையே!''

'' நாம் நம் பள்ளிக்கூடத்துக்குப் போய்விடலாம் மாலா. காலை வேளை வகுப்பு இப்போதுதான் முடிந்திருக்கும். மாலை வகுப்பு முழுவதுக்கும் நாம் போய்விடலாம்'' என்றது மணி ஆதூரத்தோடு.

அன்று மணியும் மாலாவும் வகுப் பில் அத்தனை சமர்த்தாக அமைதியாக இருந்ததைக் கண்ட அவைகளின் ஆசிரி யருக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. 'காலை யில் ஏன் வரவில்லை? எங்கே போயிருந் தீர்கள்?' என்றுகூடக் கேட்கவில்லை அவைகளை. 'பள்ளிக்கூடம்தான் எத் தனை இனிமையான இடம்' என்று நினைத்தது மாலா.

வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த போது '' இனிமேல் ஒரு நாள்கூடப் பள்ளிக்கு வராமல் இருக்கக் கூடாது'' என்றது மணி.





வீராதி வீரன்

கதை: **கௌசிகன்**
சித்திரம்.. ரமணி..


முன்னுரை

வங்காளம் இரண்டாகப் பிரிந்து, வாழ்ந்து, தாழ்ந்து இன்று 'பங்களா தேஷ்' ஆக மறுபிறவி எடுத்திருக்கும் கிழக்கு வங்கத்தின் கதை உங்களுக்கெல்லாம் தெரியும். அது அரசியல். பெரிய விஷயம்! நமக்கு வேண்டாம் அதெல்லாம். அந்த நாட்டின் சுதந்திரத்துக்காக உயிர் விட்டவர்கள் எத்தனையோ பேர். அப்படிப் பாடு பட்டவர்களில் ஒருவன்தான் ரஹீம். பத்து வயதுப் பையன். அவன் தகப்பனார் ஒரு பிரபல டாக்டர். தாயார் சிறந்த சமூக சேவகி, நர்ஸும் கூட. இவர்களெல்லாம் விடுதலைப் படையான முக்தி வாஹினியின் அங்கத்தினர்கள். ஆனால் ரஹீமுக்கு இதெல்லாம் தெரியாது. அவன் கெட்டிக்காரன். தைரியசாலி. அரசியலில் ஈடு பாடு கொள்ளும் வயது தனக்கு இன்னும் வரவில்லை என்று ஒதுங்கி ஒழுங்காகப் படித்துக் கொண்டிருந்தான். ஆனால் சுதந்திரப் போர்ச் சுழல் அவனையும் தன்னுள் இழுத்துக் கொண்டு விட்டது. இரக்க மற்ற பாகிஸ்தான் படையினரின் வெறியாட்டத்துக்கு ரஹீம் ஈடு கொடுக்கும்படியான சூழ்நிலை உருவாகி விட்டது.

தன் நாட்டு மக்களுக்கு, விடுதலை வீரர்களுக்கு ரஹீம் எப்படியெல்லாம் உதவினான்! தனியாகவா? இல்லை. முக்திவாஹினியின் உதவியுடனா? அதுவும் இல்லை. அப்படியானால்? அவன் தனக்கென ஒரு விசித்திரமான படையை உருவாக்கிக் கொண்டான். அப்படையின் அங்கத்தினர் யார் யார் தெரியுமா? ஒரு நாய், ஒரு கிளி, ஒரு கிரிப்பிள்ளை, ஒரு கழுதை, ஒரு குரங்கு, பூனை இவைதான்.

புரட்சிக்காரரர்கள் என்று சந்தேகப்பட்ட எல்லாரையும் சுட்டுக் கொன்றார்கள் மேற்கு பாகிஸ்தானியர். அப்பாவிகள், அறிவாளிகள் எல்லாரும் அவர்களுக்கு இரையாயினர். கல்லூரிகள், பள்ளிகள் மூடப்பட்டன. மக்கள் பீதியினால் பித்துப் பிடித்தது போல் ஆனார்கள். ரஹீமின் அப்பா விடுதலைப் படையணிக்கு முன்பே போய்விட்டார். வீட்டில் அம்மா மட்டும்தான் இருந்தாள். அவளுக்கும் இதோ அழைப்பு வந்து விட்டது.




ரஹீம், காயம் பட்டவர்களுக்குப் பணிவிடை செய்ய நான் போகிறேன். ஜாக்கிரதையாக இரு. விமானத் தாக்குதல் ஏற்பட்டால் வீட்டி லுள்ள நிலவறைக்குப் போய்ப் பதுங்கிக் – கொள்......
அம்மா போன சிறிது நேரத்தில் அபாய அறிவிப்புச் சங்கு ஒலித்தது. ரஹீம் தன் தோழன் ஜிம்மியுடன் நிலவறைக்குள் போனான்.
ஜிம்மி, வா. முரண்டு பிடிக்காதே...ம்... வா.
ஜிம்மியின் ஆறாவது அறிவுக்கு வரப் போகும் அபாயம் தெரிந்ததி னால்தானோ என்னமோ ரஹீமுடன் போக மறுத்தது – விமானம் வீசிய குண்டு ரஹீமின் வீட்டில் விழுந்தது.
அதிர்ஷ்ட வசமாக ஜிம்மிக்கும் ரஹீமுக்கும் ஆபத் தில்லை. ஆனால் இடிபாடுகளுக்குள் அகப்பட்டுக் கொண்டார்கள். வெளியேறும் வழி அடைபட்டு விட்டது.
ரஹீம் இடிபாடுகளை அகற்றி வெளியே வந்தான். எத்தனை நாட்களுக்குப் பிறகு? அது அவனுக்கே தெரியாது. நிலவறைக்குள் சிக்கியவன் இடிபாடு களைக் கொஞ்சம் கொஞ்சமாக அகற்ற உழைத்து, பசியாற அங்கிருந்த உணவுச் சேமிப்பில் உண்டு – களைப்பால் கண்ணயர்ந்து மறுபடி எழுந்து... இப் படி இரவு பகல் தெரியாமல் இடிபாடுகளை அகற் றப் பாடுபட்டுப் பல நாள் கழித்து வெளிவந்த போது ஊர் வெறிச்சோடிக் கிடந்தது. நகரை எதிரிகள் தம் வசப்படுத்திக் கொண்டிருந்தனர்....
டேய், யார் நீ? எங்கிருந்து வருகிறாய்? விடுதலைப் படை யைச் சேர்ந்தவன் தானே.. நட....


ஜிம்மி... ஓடி வா! அவன் எழுந்திருப்பதற்குள் தப்பி விட வேண்டும்.
ஆமாம்! ஊரார்களையெல்லாம் கைதியாக்கிக் கொட்டடியில் அடைக்கக் கொண்டு போகிறார்களே, இதில் என் அப்பாவும் அம்மாவும் கூட இருக்கலாம்.
அப்போது ரஹீமின் பின்னாலிருந்து ஒரு குரல்...


ரஹீமுக்குப் பிராணிகளிடம் அபார அன்பு. மங் கிளியைக் காப்பாற்ற முனைந்தான். ஆனால் கை எட் டவில்லை.
கீரிப்பிள்ளையோ குதிக்கப் பயந்தது. இதைக் கண்டு கிளி உதவ முன் வந்தது. கீச்...கீ என்று கத்தியபடி கீரியை நோக்கிப் பாய்ந்தது.
கிளி தன் இறகினால் வீசிக் கீரியைத் தள்ளி விடவே.....
ரஹீம் அதை லாகவமாகத் தாங்கிக் கொண்டான்.
ரஹீமின் அடுத்த தோழன் ஓர் இடிந்த வீட் டின் தொழுவத்தில் கட்டப்பட்டிருந்தான். பயத்தினால் நகர மறுத்த அதை ரஹீம் தன் அன்பினால் வெளியேற்றினான்...
வாடா ராஜா...ம் வா. இனி நீ இங்கி ருக்க முடி யாது...வா
தன் நண்பர்களோடு ரஹீம் தன் வீட்டின் நிலவறைக்குத் திரும்பினான். அங்கு உண வுப்பொருள் இருந்தது. ரஹீமுக்குச் சங்க டங்களும் அவன் புரியும் சாகசங்க ளும் இனிமேல்தான் ஆரம்பமாகின்றன.



பறவைகளின் இறகே இவர்களின் செல்வம்

மூப்பது ஆண்டுகளுக்கு முன்பு வரை நியூகினியின் மலைச்சாதியினரைப் பற்றி உலகத்துக்கு எதுவுமே தெரியாது. இன்றும்கூடப் பசிபிக் சமுத்திரத்திலுள்ள இத் தீவை முழுவதும் ஆராய்ந்து அறிந்தவரில்லை.

போலினிஷியன், மலாய்க்காரர்களின் பல்வேறு சாதியினர் இத்தீவின் உள் பிரதேசத்தில் வசிக்கின்றனர். அடர்ந்த காடுகள் மண்டிய மலைத் தொடர்கள், இனிய மலைச்சரிவுகளையும் பள்ளத்தாக்குகளையும் மறைத்துக் கொண்டிருக்கின்றன. இங்குதான் இப்பழங்குடி மக்கள் வாழுகிறார்கள். மொழியாலும் பழக்க வழக்கங்களாலும் மாறுபட்ட பல்வேறு இனத்தவர் இவர்களில் உண்டு. இத்தீவின் ஜனத்தொகையில் பாதி இந்தப் பழங்குடி மக்கள்.

இவர்கள் விவசாயிகள். இவர்களின் முக்கிய உணவு யாம் எனப்படும் இனிப்பான உருளைக்கிழங்கு (நம் சர்க்கரைவள்ளிக் கிழங்கு போல்). இவர்களின் ஆயுதம் எளிய முறையில் தயாரித்த கல்லாலான கோடரி. இந்தக் கோடரி ஆயுதத்தை உருவாக்கித் தருவது 'மாக்' என்ற இனத்தவர் (படம்) நகாசு வேலை செய்வதில் கைதேர்ந்தவர்கள் இவர்கள். கல் கோடரிகளைக் கலையழகுடன் உருவாக்கி மாதக் கணக்கில் அதற்குப் பாலிஷும் சாணையும் கொடுப்பார்கள். கோடரியின் கைப்பிடி பிரம்புகளால் பின்னப்பட்டிருக்கும். இந்த மாக் இனத்தவர் அலங்காரமாக மூக்கில் ஒருவித அணியை (குச்சி) அணிந்து கொண்டிருப்பார்கள்.


இந்த மாக் இனத்தவரின் அண்டை ஊர்க்காரர்கள் சிம்புஸ் இனத்தைச் சேர்ந்தவர்கள். டீஸ்மாக் என்ற மலையின் மறுபுறம் உள்ள மலைச்சரிவில் இவர்கள் வாழுகிறார்கள். வருடம் முழுவதும் பயிர்த் தொழில் செய்ய முடிகிறது இவர்களால். அப்படியொரு பருவநிலை. கிராமங்களில் தனித் தனியாக வாழாமல் ஒரே பெரிய வீட்டில் கும்பலாகச் சேர்ந்து வாழ்கிறார்கள். தாழ்வான இருண்ட குடிசைகள் (படம்) படுத்துக் கொள்வதற்கு மட்டுமே பயன்படக் கூடியவை. சாப்பிடும் உணவு திறந்த வெளியில் சமைக்கப்படுகிறது. எப்படி? கொதிக்கும் கற்களின் உதவியாலே தான். ஒரு விதமான 'பிரஷர் குக்கர்' போன்றதோர் அமைப்பு இவர்களுடைய சமையல் முறை. மரத்தைக் குடைந்து தயாரிக்கப்பட்டதொரு சாதனம். அதன் உட்புறத்தின் பக்கங்களில் பசும் புல்லை வைத்து நடுவில் பழுக்கக் காய்ச்சப்பட்ட கற்களைக் கொண்டு நிரப்பப்பட்டிருக்கும். இறைச்சி, கறிகாய் ஆகிய உணவுப் பண்டத்தை மணம் கூட்டும் இலைகளில் சுற்றி இந்தக் கற்களின் மீது வைப்பார்கள். அதன்மீது கொஞ்சம் நீரையும் ஊற்றுவார்கள். சூடான கல்லின் மீது நீர் வார்த்தால் என்ன ஏற்படும்? ஏராளமான நீராவி வரும். அதன் மீது மறுபடியும் இன்னோர் அடுக்கு இலை சுற்றிய இறைச்சியை வைப்பார்கள். அதன் மீது காய்ச்சப்பட்ட கற்கள். இப்படிப் பல அடுக்குகளை வைத்து மேலாகப் பசும் புல்லைக் கொண்டு மூடிவிடுவார்கள். இந்த நிலையில் இதை 90 நிமிஷங்கள் அப்படியே விட்டுவிடுவார்கள். அதன்பிறகு திறந்தால் மிருதுவான, சுவையான, பக்குவமான உணவுப் பண்டம் தயாராக இருக்கும்.

சிம்புஸ் இனத்தவரின் முக்கியமான உணவில் பன்றி இறைச்சி அவசியம் இடம் பெறும். இதனால் நிறையப் புரதச் சத்துக் கிடைக்கிறது. பெண்கள் பன்றியை வளர்ப்புப் பிராணிகளாகக் கருதிப் பாதுகாக்கிறார்கள்.

மூன்று நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை சிம்புஸ் இனத்தவர் ஒரு பெரிய விழாக் கொண்டாடுகிறார்கள். இதில் பன்றி இறைச்சிதான் பிரதான விருந்து. தங்கள் மூதாதையரைத் திருப்திப்படுத்துவதற்காகவே இவ்விழா. ஆனால், முரசு முழங்க நடனங்களுடன் அடிக்கடி விருந்து நடக்கும். ஓர் இனத்தவர் மற்றவருக்குப் பரிசு தரும்போதெல்லாம் இத்தகைய நடனமும் விருந்தும் உண்டு. இங்கு சொர்க்கத்துப் பறவை (பர்டு ஆஃப் பாரடைஸ்) என்றொரு விநோதமான பறவை காணப்படுகிறது. இதன் இறகுகள் நீளமானவை. பல வண்ணங்களுடையவை. சிம்புஸ் இனத்தவரின் செல்வமே இந்தப் பறவையின் இறகுகள்தான். கற் கோடரிகளை இந்தப் பறவை இறகுக்கு அடிக்கடி இவர்கள் பண்டமாற்று செய்து கொள்ளுவார்கள். யாரிடம் அதிக இறகுகள் இருக்கின்றனவோ அவனே ஆணழகன், செல்வச் சீமான். ஆண்கள் இந்த இறகுகளைக் கொண்டு கம்பீரமான தலையணிகளைத் தயாரித்து அணிந்து கொள்ளுகிறார்கள். அம்பும் வில்லும் இந்தப் பறவைகளை வேட்டையாடவே பயன்படுகின்றன. (படம்) கிளிஞ்சல் ஓட்டினால் ஆன தட்டுப் போன்ற ஒரு கழுத்து அணியையும் தங்கள் செல்வச் சிறப்பின் அறிகுறியாகக் கழுத்தில் அணிகின்றனர் இம் மலை ஜாதியினர். மாலை வேளைகளில் நீண்ட குடிசைகளில் இளம் வயதுள்ள ஆண் பெண்கள் கூடுவார்கள். அப்போது சேர்ந்து நடனமாடுவதற்குப் பதில் ஒருவரைப் பார்த்து மற்றவர் உட்கார்ந்தபடி பாடுகிறார்கள்.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் பல தோட்டங்கள் உண்டு. பங்கீடு முறைப்படி இதைச் சொந்தப்படுத்திக் கொண்டிருப்பார்கள். கடினமான வேலைகளான நிலத்தைப் பண்படுத்துதல், வேலி அமைத்தல், நீர் பாய்ச்சுதல் ஆகியவைகளை ஆண்கள் செய்கிறார்கள். நடவு, களையெடுத்தல், அறுவடை ஆகியவை பெண்களுக்காக ஒதுக்கப் படுகின்றன.







காசோ காசு !

தமிழ்ப் புத்தாண்டு தினம்!

'கனி நோட்டம் பார்த்தல்' என்று கேரள மாநிலத்தில் ஒரு பழக்கம். சிறுவர் சிறுமியர்களைப் பெற்றோர்கள் படுக்கையிலிருந்து எழுப்பி அழைத்துச் சென்று, தயாராக நிலைக் கண்ணாடி முன் வைக்கப்பட்டுள்ள பொருள்களின் முன்பு நிறுத்திக் கண்களைத் திறக்கச் சொல்வார்கள்.

கண்களைத் திறந்து கண்ணாடியில் பார்த்தால் என்ன தெரியும்?

முக்கனிகள், அரிசி, பருப்பு, வெல்லம் இவற்றுக்கு அடுத்தபடியாகத் தட்டுக்களில் பரப்பி வைக்கப்பட்டுள்ள ரூபாய், அணா, பைசா, வராகன் — ஆம், 'நயா பைசா' காலத்திலா இவையெல்லாம் என்று பிரமிப்பு அடைகிறீர்களா? நம் நயா பைசாவுக்கும் இந்த மாதத்துடன் 15 வயது (ஏப்ரல் 1957) பூர்த்தியாகிறது. இந்த நயா பைசா காலத்திலும் சித்திரை வருஷப் பிறப்பன்று 'கனி நோட்டம்' பார்ப்பதற்கென்றே ஏற்கெனவே புழக்கத்தில் இருந்து வந்த வெள்ளி, தங்க, நிக்கல், செம்பு நாணயங்களை இன்றும் பாதுகாத்து வருகின்றனர் கேரள மக்கள்.

1800 வருடங்களுக்கு முன் நம் நாட்டில் அமுலில் இருந்தது வராகன் தான். தங்க நாணயம் அது. ஒரு பூவராகனுக்கு 42 பணம். ஒரு பணத்துக்கு 80 காசுகள். ஒரு வராகனின் மதிப்பு இன்றைய ரூபாய்க் கணக்கில் சுமார் மூன்றரை ரூபாய். அந்தக் காலத்தில் தங்கத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது நம் நாணயங்கள்.

ரூபாய், அணா, பைசா கணக்கு பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்ட பிறகு வந்த கணக்குத்தான்.

ரூபாய் வந்த பிறகுதான் வெள்ளி நாணயங்கள் பிரபலமடைந்தன. ஆனால் இதற்கு முன்பே வெள்ளிப் பணங்கள் சில புழக்கத்தில் இருந்திருக்கின்றன.

இவை சுல்தான் பணம், தலைச்சேரிப் பணம் ராஜகோபாலப் பணம் என்றெல்லாம் இருந்து வந்தன. ஐம்பது வருஷங்களுக்கு முன் புதுக்கோட்டையில் 'அம்மன் காசுகள்' என்றொரு நாணயம் இருந்து வந்தது. காலணாவுக்கு ஐந்து அம்மன் காசுகள். ஆறு அம்மன் காசுகள் கொடுத்தால் ஒருவர் வயிறார உண்ணலாம் அந்தக் காலத்தில்!

அந்தக் காசின் ஒரு பக்கத்தில் பிரகதாம்பாள் அம்மன் உருவம் பொறித்திருக்கும். அம்மன் காசைவிட இன்னும் சிறிய அளவில் ஒரு காசு மலையாளத்தில் அமுலில் இருந்தது. அதற்குக் கொச்சுக் காசு என்று பெயர். ஒரு ரூபாய்க்கு 450 கொச்சுக் காசுகள்.

'சல்லி' என்று கூறப்பட்டு வந்த நாணயம் சிறியது. செம்பாலானது. நாகூர்ச் சல்லி, தென்னை மரத்துச் சல்லி என்றெல்லாம் காசுகள் இருந்தன. தென்னை மரம் போட்ட சல்லி இலங்கைக் காசாகும்.


'தம்பிடி' என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா? கிழக்கிந்தியக் கம்பெனி காலத்தில் வெளியிடப்பட்ட காசுகள் என்னென்ன தெரியுமா? இப்போதுள்ள ஒரு ரூபாய் அளவுக்கு அரையணா இருந்தது. எட்டு மூலையுள்ள நாலணா. மிகச் சிறிய வெள்ளி இரண்டணா.

காலணாக்களில்தான் எத்தனை மாறுதல்கள்! கும்பினிக் காலணா, மொட்டைத் தலை எட்வர்டு காலணா, ஜார்ஜ் காலணா, ஓட்டைக் காலணா, குதிரைக் காலணா, ஆக அநேகம்!

நம் ரூபாய் தோன்றி 215 வருடங்களாகப் போகின்றன. முதல் இந்திய ரூபாய் 1757 ஆகஸ்ட் 29ந் தேதி கல்கத்தாவில் அச்சடிக்கப்பட்டது. நவாப் சுராஜ் உத் தௌலாவுக்கும் கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் இடையே ஏற்பட்ட உடன்படிக்கை பேரில் நாணயம் அச்சடிக்கும் தொழிற்சாலை கல்கத்தாவில் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் தகுந்த இயந்திர சாதனங்களுடன் நாணய அச்சாலை ஏற்பட்டது 1824ல்தான். 1814–1816ல்தான் ரூபாய் இந்தியாவின் முக்கிய நாணயமாயிற்று.

''ஆங்கிரஸன்''

(நாணயங்கள் உதவியவர் - பாகு, புகைப்படங்கள் - விசுவநாதன்)









கொஞ்சும் கோகுலம்!



(அட்டைப்படக் கவிதை)

குழந்தை உண்டு மழலை உண்டு
கோகு லத்திலே! — சின்னக்
குருவி உண்டு பறவை உண்டு
குதூக லத்திலே !

கண்ணன் உண்டு ராதை உண்டு
காணும் இடத்திலே! — பசுக்
கறவை உண்டு கன்றுமுண்டு
வேணும் இடத்திலே !


வெண்ணெய் உண்டு தயிரும் உண்டு
ஒவ்வோர் வீட்டிலே! — கண்ணன்
விரும்பியதைத் தின்ன உண்டு
அவ் வவ் வீட்டிலே !


கீதம் உண்டு ராகம் உண்டு
கேட்கும் போதிலே ! — தெய்வ
கிண்கிணிப் பண் கொஞ்ச உண்டு
யார்க்கும் காதிலே !

கும்மி உண்டு குரவை உண்டு
கூடி வலத்திலே! — இளம்
கோபியர்கள் ஆட உண்டு
பாட நலத்திலே !

கோகுலம்தான் கண்ணன்தலம்
கோலா கலத்திலே! — இனிக்
கும்மாளம் தான் நம்மவர்க்கும்
நாலா விதத்திலே !

தமிழழகன்





சுண்டு, குண்டு சீமாத்தாத்தா

— சாமா

சுண்டுவும் குண்டுவும் சகோதரர்கள். அது மட்டுமா? சரியான விஷமக் கொடுக்குகள். இவர்களுடைய தாத்தாதான் சீமா. எல்லாரும் அவரைச் சீமாத் தாத்தா என்று அன்பாக அழைப்பார்கள்.

ஒருநாள் சுண்டுவும் குண்டுவும் ஒரு காமிராவுடன் ஓடிவந்தார்கள். கண்ணில் பட்டதை யெல்லாம் 'கிளிக்' 'கிளிக்' என்று கிளிக்கினார்கள்! கிளி, அணில், கன்றுக்குட்டி, கழுதைக்குட்டி என்று ஒன்று விடாமல் படம் எடுத்துத் தள்ளினார்கள்.

அப்போது அங்கே வந்தார் சீமாத் தாத்தா. ''பசங்களா, போட்டோப் படமா? எனக்கு ரொம்ப நாளா ஆசை, என்னை ஒரு படம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று. என்னை இப்படியே ஒரு படம் பிடியுங்களேன்'' என்று உருமாலைக் கழுத்தில் மாலையாகப் போட்டுக் கொண்டு அதன் இரு முனைகளையும் கையில் இழுத்துப் பிடித்தபடி இடுப்பில் கையூன்றி நெஞ்சை நிமிர்த்தியபடி 'போஸ்' கொடுத்தார் சீமாத் தாத்தா.

''இப்படி யெல்லாம் படம் எடுத்து என்ன பலன் தாத்தா? இது மூவி காமிராவாக்கும். 'ஆக்ஷ'னோட எடுத்தால்தான் அபாரமா யிருக்கும்'' என்றார்கள், சுண்டுவும் குண்டுவும்.



''இவ்வளவுதானே? எத்தனை வித ஆக்ஷன் வேணும் உங்களுக்கு? இதோ பாருங்கள்'' என்று ஆசனங்கள் போட ஆரம்பித்து விட்டார் சீமாத் தாத்தா. யோகாசனத்தில் 'டி-யோக்' பட்டம் வாங்கியவராயிற்றே? சிரசாசனம், ஹலாசனம், மயூராசனம், பத்திமோத்தாசனம் என்று உடலைப் போட்டு முறுக்கிச் சர்க்கஸ் வேலை யெல்லாம் செய்து காட்டினார் தாத்தா.

பையன்களுக்கு ஒரே பிரமிப்பு. ''சபாஷ் தாத்தா. பிரமாதம். உங்களை ஆசனங்கள் போடச் செய்து ரொம்பச் சிரமப்படுத்தி விட்டோம். இன்னும் ஒன்றே ஒன்று. ஆனால் அதைச் சொன்னால் உங்கள் மனத்துக்கு இன்னும் சிரமமாக இருக்குமே என்றுதான்...'' இழுத்தான் குண்டு.

''சிரமமா? எனக்கா? நான் அந்தக் காலத்து மனுஷனாக்கும். சிரமம் என்பதே என் அகராதியில் கிடையாது.




குக்குடாசனம் போட்டுக் காட்டட்டுமா?'' என்று கச்சத்தை வரிந்து கட்டிக் கொண்டார் சீமாத் தாத்தா.

''தாத்தா...'' என்று கூப்பிட்டு நிறுத்தினான் சுண்டு. மேலே சொல்லத் தயக்கம் அவனுக்கு.

''சும்மா சொல்லுடா?'' முடுக்கினார் தாத்தா.

''வந்து... வேறொன்றுமில்லை. இத்தனை நேர்த்தியாக நீங்கள் யோகாசனங்கள் செய்வீர்கள் என்று தெரிந்திருந்தால் நாங்கள் காமிராவில் நிஜமாகவே பிலிம் போட்டுக் கொண்டு வந்திருப்போம்'' என்றார்களே பார்க்கலாம், சுண்டுவும் குண்டுவும்.

சீமாத் தாத்தா இதைக் கேட்டு அப்படி ஏன் 'மடார்' என்று கீழே விழுந்தார் என்று சுண்டுவுக்கும் குண்டுவுக்கும் தெரியவில்லை. ஒருவேளை அதுவும் ஏதாவது ஆசனமோ? அப்படியும் இருக்கலாம்!



கோகுலத்தில் கிருஷ்ணன் வளர்ந்து வரும்போது அவனைக் கொல்லுவதற்காக அரக்கர்கள் பலரை அனுப்பினான் கம்சன். கண்ணன் தன் தோழர்களுடன் விளையாடும்போது அவர்கள் கிருஷ்ணனைக் கொல்ல முயன்றார்கள். ஆனால் அத்தனை பேர்களையும் கிருஷ்ணன் கொன்று வீர விஜயனாக விளங்கினான்.

கிருஷ்ணனின் லீலைகளை நினைவுபடுத்த இதோ ஒரு விளையாட்டு. தாயக் கட்டை இருக்குமானால் அதை உருட்டி ஆறு விழும்படி செய்து ஆட்டத்தை ஆரம்பிக்க வேண்டும். சோழி வைத்திருப்பவர்கள் நாலு விழும்படி செய்து ஆட்டத்தை ஆரம்பிக்கலாம். அதன் பிறகு தாயக் கட்டையையோ, சோழியையோ உருட்டி, விழும் எண்ணிக்கைக்கு ஏற்பக் காய்களை நகர்த்த வேண்டும். சில கட்டங்களில் உங்களுக்குச் சில எச்சரிக்கைகள் விடப்பட்டிருக்கின்றன. அதன்படிக் காய்களை முன்னே பின்னே நகர்த்திக் கொண்டு போக வேண்டும். யார் முதலில் கோவர்த்தன கிரிக்குப் போகிறார்களோ, அவர்களுக்குக் கண்ணனின் பாதுகாப்புக் கிடைக்கும். இதில் எத்தனை பேர் வேண்டுமானாலும் விளையாடலாம்.


புயலில் கேட்ட குரல்

கந்தன் உங்களைப்போல ஒரு பையன். ரொம்பப் புத்திசாலி. ஆனால் அவனிடம் ஒரே ஒரு கெட்ட குணம் மட்டும் உண்டு. அது என்ன தெரியுமா? அவனுக்குக் கடவுள் நம்பிக்கை கிடையாது. 'சாமியாவது, பூதமாவது! எல்லாம் சுத்தப் பொய். கண்ணுக்குத் தெரியாத எதையும் நம்பமாட்டேன். கல்லைக் கும்பிடமாட்டேன்' — இப்படி எல்லாம் தன் தாயாரிடம் விதண்டாவாதம் செய்வான். அவனுக்குத் தகப்பனார் கிடையாது. கந்தனின் புத்தியைத் திருத்தக் காமாட்சி அம்மாள் எவ்வளவோ முயன்றாள். ஆனால் ஒன்றும் பயன்படவில்லை. 'கடவுளே, என் மகனை நல்வழிப்படுத்துவது உன் பொறுப்பு' என்று ஆண்டவனை வேண்டுவதைத் தவிர பாவம் அவளால் வேறு எதுவும் செய்ய முடியவில்லை.

ஒரு சமயம் கந்தனின் தாயாருக்குக் கடுமையான விஷ ஜுரம் வந்துவிட்டது. வைத்தியர் ஒரு பச்சிலையைக் குறிப்பிட்டு, 'அதைக்கொண்டு வந்தால்தான் அவள் பிழைப்பாள்' என்று கூறி விட்டார். கந்தனுக்குக் கடவுள் நம்பிக்கை இல்லையே தவிரத் தன் தாயாரிடம் உயிரையே வைத்திருந்தான். ஆகவே வைத்தியர் குறிப்பிட்ட பச்சிலையைக் கொண்டு வர, தானே அடுத்துள்ள காட்டுக்குச் சென்றான். அபூர்வமான பச்சிலை அத்தனை சுலபமாகக் கிடைத்துவிடுமா? காடெல்லாம் தேடித் தேடி அலைந்து சேகரித்தும்கூட வேண்டிய அளவு கிடைக்கவில்லை. இருட்டும் நேரமாகிவிட்டது. கந்தன் ரொம்பக் களைத்துப் போய்விட்டான். வானம் திடீரென்று இருண்டது. இடி தடதடவென்று அதிர்ந்தது. எங்கிருந்தோ காற்றும் மழையும் சூறாவளியாக வீச ஆரம்பித்தன. வீட்டுக்கு ஓட நினைத்தான் கந்தன். மின்னல் கண்ணைப் பறித்தது. பாதையே தெரியாமல் மழை கொட்டிற்று.

கந்தன் நடுங்கிப் போய்விட்டான். ஒரு பெரிய மரத்தின் பொந்திலே போய் ஒண்டிக் கொண்டான். திடீரென்று அந்தக் கொட்டும் மழை இரைச்சலையும் கிழித்துக் கொண்டு ஒரு குரல் ஒலித்தது. ''கந்தா.... கந்தா! ஓடிவந்துவிடு. வெளியே வா. கந்தா ஓடி வா!''

கந்தன் மரப்பொந்திலிருந்து துள்ளிக் குதித்து வெளியே வந்து வெட்ட




மூளைக்கு வேலை

இங்குள்ள எண்களில் ஏதாவது மூன்று எண்களைக் கூட்டினால் கூட்டுத் தொகை 50 வர வேண்டும். சட்டென்று சொல்லுங்கள் பார்க்கலாம். (விடை: 25, 19, 6)





இந்தப் படத்தில் புள்ளியிட்ட பகுதிகளை யெல்லாம் கலர் பென்சிலால் பூசுங்கள். ஓர் அற்புதம் நிகழும்.



வெளியில் போய் நின்று கொண்டு தன்னை யார் கூப்பிட்டது என்று பார்த்தான். அதே விநாடி காடே கிடுகிடுக்க ஓர் இடி அதிர்ந்தது. மறு நிமிஷம் கந்தன் ஒதுங்கி யிருந்த மரம் குபீரென்று தீப்பற்றிப் பயங்கரமாக எரியலாயிற்று. ஒரு பெரிய இடி அந்த மரத்தில் விழுந்து அதைக் கொழுந்துவிட்டு எரியும்படி செய்திருக்கிறது.

கந்தனின் உடல் பயத்தினாலும் குளிரினாலும் வெட வெட வென்று நடுங்கியது. காலடியிலே பூமியே ஆடுவது போலிருந்தது. 'நல்ல வேளை, தப்பினேன்' என்று கந்தனின் வாய் முணுமுணுத்தது. அவனை அறியாமல் அவன் கண்கள் வானத்தை நோக்கின.


யாரோ ஆணையிட்டது போலச் சட்டென்று மழை நின்றது. அதே குரல் மறுபடியும் கேட்டது. ''கந்தா...! நான் கூப்பிட்டது காதில் விழவில்லையா? ஓடி வா, கண்ணே !''

இப்போது கந்தனால் குரல் வந்த திசையை உணர முடிந்தது. அது ஒரு கிழவியின் குரல் என்பதையும் அறிந்தான். அவன் அருகில் ஓடிப் போய், ''பாட்டி, நான் இதோ இருக்கிறேன். என்னை எதற்காக அழைத்தீர்கள் ?'' என்று கேட்டான்.


வியப்புடன் கந்தனைப் பார்த்த கிழவி, ''உன்னை நான் கூப்பிடவில்லையேயப்பா! மாடு மேய்க்கப் போயிருக்கும் என் பேரப் பிள்ளை கந்தனை அல்லவா அழைத்துக் கொண்டிருக்கிறேன்'' என்றாள். அதே சமயம் சொட்டச் சொட்ட நனைந்தபடி ஒரு பையன்—அவள் பேரன் கந்தன் ஓடி வந்து கொண்டிருந்தான்.

கடவுளை நம்பாத கந்தன், கிழவியிடம் நடந்த விவரத்தைச் சொன்ன போது, கண்களில் நீர் ஒழுகக் கிழவி கூறினாள்: ''ஆஹா ! கடவுளின் அற்புதந்தான் என்ன! உன்னைக் காப்பாற்ற என் குரலைப் பயன்படுத்திக் கொண்டாரே. அந்தக் கருணை வள்ளல், அவர் அன்புக்கு ஈடு இணை ஏது?'' என்றாள். கந்தனுக்கும் இப்போது கடவுளின் கருணை புரிந்தது. 'உருவமில்லாத அவர் எங்கும் நிறைந்திருக்கிறார், எல்லாவற்றையும் பார்க்கிறார், எல்லாரையும் காப்பாற்றுகிறார்' என்று அவன் அம்மா அடிக்கடி சொல்லுவாளே அது எத்தனை உண்மை என்று வியந்தபடியே நட்க்கலானான் வீட்டை நோக்கி.


இப்போது கந்தன் கடவுளிடம் மாறாத பக்தி கொண்டவனாகி விட்டான்.



காக்கையிடம் போக நரிக்கு வழி தெரியவில்லையாம். உதவ முடியுமா உங்களால்?




எண்களின் வரிசைப்படி புள்ளிகளை நேர் கோடுகளால் சேர்த்துப் பாருங்களேன்!




சிரிக்க... ..சிரிக்க!


"என் பையன் நூறு கெஜ ஓட்டத்தை ஆறு செகண்டில் முடித்துப் பரிசு பெற்றான்...!"
"சுத்தப் பொய்! உலக ரெகார்டே ஒன்பது செகண்ட்!"
"அதுலே அவன் குறுக்குவழி ஒண்ணு கண்டுபிடிச்சு வைச்சிருக்கானய்யா!"


இவ்வளவு தேங்காய்களையும் எப்படி உரிப்பது? கடப்பாரை இல்லையே?
சபாஷ்! நன்றி! நன்றி!

சாமா


???
முள்ளம் பன்றி: சவாரி செய்யவா அழுறே! என் மேல் உட்காரு. ஜோரா சவாரி செய்யலாம்.


உடம்பு சரியாக இல்லையா? நாக்கை நீட்டு!
ட்ரிங்
①
???
②
??
③
????
④


"இந்தப் பிறைச் சந்திரனைப் பார் என்று சொல்றேன். வேறு எதைப் பார்க்கறே?"
"முழுச் சந்திரனைப் பார்த்திண்டிருக்கேன் அப்பா!"


பலே பாலு!


கற்பனை: வாண்டு~ சித்திரம்: செல்லம்



பாலுவைத் தெரியுமா உங்களுக்கு? அவனை எப்படித் தெரிந்திருக்கப் போகிறது? கோகுலம் காலனியில் அவன் இப்போதுதானே வந்து குடியேறி யிருக்கிறான். அவனைப் பற்றி இனிமேல் தான் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். பாலு பலே ஆள்; படுகட்டிப் பயல். வந்த சண்டையை விடமாட்டான். வம்புச் சண்டைக்குப் போகமாட்டான். ஆனால் புத்திசாலி.

பாலுவின் அப்பா ரமேஷ் பெரிய உத்தியோகத்தில் இருக்கிறார். கைநிறையச் சம்பளம். அம்மா கல்யாணி அன்பே உருவானவள். இவர்களின் ஒரே செல்லப் பிள்ளைதான் பாலு. இவனது சாகசங்களை இதே இடத்தில் இதழுக்கு இதழ் கண்டு களிக்கலாம். அதோ, புது வீட்டுக்குக் குடிவருகிறான் பாலு... இனி உங்களுக்குக் கொண்டாட்டம்தான்!





ஐயோ! "புல்டாக்" குன்னு...
என்ன தம்பி? எங்களைப் புடிக்க வந்தே போலிருக்கே...
கிர்..ர்ர்ர்
இந்த ஊஞ்சலிருந்ததோ நான் பிழைத்தேன். பேருக்கு ஏத்தாப்பலே அது புலிதான்.. ..அப்பாடா! வேலிக்கு அப்பாலே போய்க் குதிப்போம்.
கிர்.. ர்ர்ர
அந்த நாய் இருக்கறதுனாலே அந்தப் பயங்க இப்படித்துள்ளறுவ. அதுக்கு ஒரு வழி பண்ணறேன்.
என் ஐடியா வேலை செய்யுது. அந்தக் குண்டு நாய் எலும்பைப் பார்த்துட்டு வருது... வரட்டும். அது வரவர நான் கயிற்றை இழுக்கறேன்.
லினோலியம் விரிப்புச் சுருட்டுக் குள்ளே வந்து மாட்டிக்கிட்டியா? வா... வா...
?
ஐயோ! டைகர்... டைகர் ஓடியா. வந்து இவனை... ச்.. சூ... ஆ!
டைகர் காட்டிலே இருக்கு. நான் சொன்ன படி உங்களை ஓராட்டி தட்டி முடியற வரைக்கும் அது இங்கே வராது.
கிர்.. ர்ர்ர்
உங்க பிள்ளையைப் பார்த்தேளா? வந்து நுழையறதுக்கு முன்னாடி நண்பர்களைச் சேர்த்துக் கொண்டு, உங்களுக்கு ஒத்தாசையா சாமான்களை உள்ளே கொண்டு சேர்க்கிறதைப் பாருங்கோ. பாலுன்னு பாலுதான்!



குவலயத்தில் "கோகுலம்" ஓங்க!

லிப்கோவின் வாழ்த்து :

கோவர்த் தனம்எடுத்த கோவே! குழலூதி
ஆவர்க்கம் காத்த அரணியனே!—நீவளர்ந்த
கோகுலமே போலக் குவலயத்தில் ஓங்கஅருள்
கோகுலம் பார்புகழக் கூர்ந்து.

சிறுவருக்கேற்ற சீரிய லிப்கோ வெளியீடுகள் :

1. திருவிளையாடற் புராணம் *(சுருக்கம்)* ரூ. 1.00
2. பெரிய புராணம் *(சுருக்கம்)* ரூ. 1.00
3. திருப்புகழ் மஞ்சரி ரூ. 1.30
4. குறள் மணிக்கதைகள் ரூ. 1.20
   —புத்தகங்கள் 1, 2 ஒவ்வொன்றும்
5. வள்ளுவர் மொழியும் தெள்ளிய உரையும் ரூ. 1.50
6. வள்ளுவர் வாய்மொழி *(குறள் மூலம்)* ரூ. 0.40
7. பொய்யாமொழிக்குப் பொழிப்புரை *(குறள் தெளிவுரை)* ரூ. 0.40
8. பாரதியார் பாடல்கள் *(சில)* ரூ. 0.35
9. LIFCO Tiny Dictionary (Eng.-Eng.- Tamil) ரூ. 1.90
10. Little Book of Letters ரூ. 2.50

பதிப்பகத்தார் :

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி, சென்னை-17.

லிப்கோவின் நேரடி விற்பனை நிலையம்: 17/1, நந்தி கோயில் தெரு, தெப்பக்குளம், திருச்சி-2.

எம். தாமோதரம் & கம்பெனி, 108, கார்ப்பரேஷன் பழக்கடை, சென்னை-1;

மற்றும் உங்களூர் புத்தகக் கடைகளிலும்,
ஹிக்கின்பாதம்ஸ் ரெயில்வே ஸ்டால்களிலும் கிடைக்கும்.

RAE

வருங்கால இளந்தலைமுறையினருக்கு
எமது மனமார்ந்த நல் வாழ்த்துக்கள்

•

வளமான வாழ்வு ஒளிமயமாக விளங்க
நாட்டின் தலைசிறந்த

பெங்கால் லாம்புகள்

உபயோகியுங்கள்

•

Bengal
LAMPS TUBES


பெங்கால் எலெக்ட்ரிகல் கம்பெனி
சென்னை-17 ○ பெங்களூர்-1


சிக்லெட்ஸ்
களிப்-
பூட்டும்
சூயிங்
கம்
LEMON
ORANGE
Chiclets
12 PIECES
வேடிக்கை பார்,
விளையாட்டுப் பார்,
மகிழ்ச்சியூட்டும்
சிக்லெட் பார்,
தின்னத் தின்னப்
பெருகும் சுவை,
நாவிற்கினிய
நான்கு வகை
லெமன்,
ஆரஞ்ச்,
பெப்பர்மின்ட்,
டுட்டி ஃப்ரூட்டி.

தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ள...



50 F-203 TM



'கோகுலம்'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள் சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக, ஆர். அனந்தநாராயணனால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: சதாசிவம்



LRDC-6 R/72 TAM

Registered No. M.

"'ஜாக்கிரதையாகக் கையாளவும்' என்று எழுதட்டுமா?"

"அவசியமில்லை. ஸதர்ன் ரோட்வேஸில்தானே அனுப்பப் போகிறோம்?"

பிரதி வருடமும் பல லட்சம் டன் எடையுள்ள பார்ஸல்களை ஸதர்ன் ரோட்வேஸ் சுமந்து சென்று சேர்க்கிறது. பார்ஸல்களை அது ஜாக்கிரதையாகக் கையாள்கிறது. ஒவ்வொருவரையும் தனி அக்கறையுடன் கவனித்து சேவை செய்கிறது. இதனாலெல்லாம்தான் அதனிடம் வாடிக்கையாளர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. பார்ஸல்களை ஏற்றுவது, எடுத்துச் செல்வது, இறக்குவது அனைத்தையும் விசேஷப் பயிற்சி பெற்ற ஊழியர்களே செய்கிறார்கள்.

ஆகவே உங்கள் பார்ஸல்களை ஸதர்ன் ரோட்வேஸ் நல்லபடியாகவும் பத்திரமாகவும் கொண்டுபோய்ச் சேர்ப்பதில் வியப்பில்லை.

வாடிக்கையாளர்களிடை வளர்ந்து வரும் நல்லெண்ணமும் நம்பிக்கையும்தான் தென்னகம்பூராவையும் தன் பார்ஸல் ஸர்வீஸினால் ஸதர்ன் ரோட்வேஸ் அரவணைக்கத் துணை புரிந்துள்ளது. தங்கள் பண்டங்களை அனுப்புவதற்கு மேன் மேலும் அதிக மக்கள் ஸதர்ன் ரோட்வேஸைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

TVS



ஸதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிமிடெட்

டிவிஎஸ் தொகுப்பைச் சேர்ந்த நிறுவனங்களில் ஒன்று

மதுரை

